# இலங்கை

கொலை, தாக்குதல், கடத்தல், அச்சுறுத்தல், தணிக்கை இலங்கையில் பத்திரிகையாளர்களுக்கு எதுவும் தவிர்க்கப்படவில்லை. தமிழ் புலிகளுக்கு( LTTE ) எதிரான இராணுவ தாக்குதல் விளைவு பத்திரிகை சுதந்திரத்துக்கு பாரதுாரமான பின்னடைவை ஏற்படுத்தி உள்ளதில் அரசின் உயர் அதிகாரிகள் முக்கியமாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் நேரடியாகப் பங்கெடுத்துள் ளனர்.

தமிழ் பிரிவினைவாதிகளுடனான(LTTE) இலங்கை அரசின் பாரிய இராணுவ வெற்றி பத்திரிகைத்துறைக்கும் பிரஜைகள் குரலுக்கும் எதிரான அடக்குமுறைக்கும் வழிவகுத்துள்ளது . ஜனநாயகவழியில் தெரிவுசெய்யப்பட்ட அரசுகளில் இலங்கை ஊடகசுதந்திரத்தை குறைவாக மதிக்கும் நாடாக இருக்கிறது .

வடக்கில் ஆயிரக்கணக்கான பொதுமக்களை பாதித்துள்ள யுத்தம் சுயாதீனமான சாட்சிகள் யாருமின்றி நடக்கிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்கு யுத்தபிரதேசத்துக்கு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது இராணுவத்தரப்பில் இத்தடை பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு கருதியே என்று சொல்லப்பட்டாலும் உண்மையில் இராணுவ நடவடிக்கைகளுக்கு தடங்கல் ஏற்படாமல் இருப்பதற்கே. வடக்கில் யுத்தபிரதேசத்தில் இருந்து வரும் தமிழ் மக்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள தடை முகாம்கள் அமைந்துள்ள யாழ்குடா பகுதிக்கும் பத்திரிகையாளர்கள் செல்வதற்கு அரசாங்கத்தால் அனுமதி இறுக்கப்பட்டுள்ளது.

இராணுவமும் சிங்கள தேசியவாதக் குழுக்களும் தனியார் ஊடகங்களுக்கு குறிப்பாக இராணுவ விடயங்களை விசேடமாக கையாள்கின்ற ஊடகங்களுக்கு எதிராக நிரந்தர அச்சுறுத்தல்களை மேற்கொள்கிறார்கள்.

உயர் தரமான ஆய்வுகளுடன் வெளியான பத்திரிகைகளை கொண்டிருந்த இலங்கைத்தீவின் ஊடகத்துறை இன்று அடங்கிச்செல்ல அல்லது நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள நிலையில் ஊடகங்கள் இராணுவ தந்திரங்களை விமர்சிக்கவோ ஆராயவோ அஞ்சுகின்றன. தற்போது போரில் கொல்லப்பட்ட(LTTE) போராளிகள் விபரங்கள் தவிர இராணுவ மற்றும் மக்கள் தரப்பு இழப்புகள் இடம்பெறுவதில்லை.

ஒடுக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் புலிகள் தற்கொலைத் தாக்குதல்களை செய்யத்தயங்கவில்லை. தாக்குதலில் தொலைக்காட்சிஊடகவியளாளர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். மேலும் பிரிவினைவாதிகள் தங்கள் தோல்விகளையும் மக்கள் மீதான குற்றங்களையும் மறைப்பதற்கு அச்சுறுத்தல்களையும் பொய்ப்பிரச்சாரங்களையும் மேற்கொண்டு உண்மையை மறைக்க முற்படுகின்றனர். ஆனாலும் தமிழ்ப்பத்திரிகையாள ர்கள் குறிப்பாக தமிழ்தேசிய கொள்கையை ஆதரிப்போர் ஒட்டுப்படை குழுக்களையிட்டே முதலில் அச்சம் கொள்ள வேண்டியவராக உள்ளனர். யாழ்ப்பாணத்தில் EPDP குழுவும் கிழக்கில் கருணா குழுவும் குறிப்பிடத்தக்கவை. இக்குழுக்கள் பாதுகாப்பு படையினரின் நல்ஆசீர்வாதத்துடனேயே செயற்பட முடிகிறது.

நீண்டகாலமாக தமிழ்ஊடகத் துறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டு இருந்த ஊடகசுதந்திரத்திற்கெதிரான வன்முறை இன்று சிங்கள ஆங்கில துறைகளையும் தாக்கத்தொடங்கிஉள்ளது. "SIRASU" தொலைக்காட்சி ( MTV குழு) தலைநகரில் ஆயுததாரிக ளால் தாக்கப்பட்டிருந்தது. அது நாட்டுப்பற்றுடன் செயற்படவில் லை என்று காரணம் காட்டப்பட்டது. மிகவும் சதந்திரமான பதிவு Sunday Leader ன் ஆசிரியர் தை 2009ல் கொழும்பில் கொலை செய்யப்பட்டார் கடந்த முன்று வருடங்களாக பத்திரிகையாளர் சம்மந்தப்பட்ட தாக்குதல் கொலை விசாரணைகள் போலவே காவல்த்துறை சந்தேகநபர்களை கைதுசெய்ய இயலாமல் இருந்தது.

தமிழ் பத்திரிகையாளரை அச்சுறுத்துவதற்காக அரசு அவர்களில் முவரை கைதுசெய்தது. அதில் இரண்டு முக்கியமானவர்கள் J. S. Tissainayagam (Sunday Times) N. Vithyatharan (Uthayan) பயங்கரவாதக் குற்றம் சாட்டப்பட்டு இவர்கள் தடயங்கள் எதுவும்இன்றி தடுத்து வைக்கப்படடு உள்ளனர்.

வெளிநாட்டு ஊடகங்களுக்கு தீவில் வேலை செய்வது மிகவும் கடினமாகி உள்ளது. அரச தலைவரின் சகோதரர் Gotabhaya Rajapaksa BBC AL Jazeera ஊடகங்களுக்கு அவ் ஊடகங்கள் இலங்கையில் மேற்கொண்ட செய்தி அறிக்கைகள் காரணமாக அச்சுறுத்தல் விடுத்திருந்தார். சர்வதேச ஊடகங்களின் சில புகைகப்பட தகவலாளர்கள் இரணுவத்தின் ஆதரவாளர்களால் அச்சுறுத்தப்பட்டதால் நாட்டைவிட்டு தப்பிசெல்லும்படி ஆகியது. பல பத்திரிகையாளர்களும் ஊடகசுதந்திரத்திற்காக பாடுபடுபவர்களும் அவர்களைப்போலவே தீவை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.